DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 569/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | தனசேகர் |
| Father / Husband Name | கண்ணையன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.08.2026

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கின் புகார்தாரர். என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன்.

1. 30.08.2025 ம் தேதியிட்ட புகார் மனு ம.சா.ஆ.1 ஆகவும்,

2. மேற்படி புகாருக்கு மதுராந்தகம் காவல் நிலையத்தில் 01.09.2025 ம் தேதி வழங்கப்பட்ட புகார் ஏற்பு ரசீது ம.சா.ஆ.2 ஆகவும்,

3. நான் 11.10.2025 அன்று செங்கல்பட்டு காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மற்றும் அசல் அஞ்சல் ரசீது ம.சா.ஆ.3 ஆகவும்,

4. அதே தேதியில் நான் மதுராந்தகம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மற்றும் அசல் அஞ்சல் ரசீது ம.சா.ஆ.4 ஆகவும்,

5. செங்கல்பட்டு காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகாருக்கான போஸ்டல் ட்ராக் ரெக்காடு கணினி பதிவிறக்கம் நகல், ம.சா.ஆ.5 ஆகவும்,

6. மதுராந்தகம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகாருக்கான போஸ்டல் ட்ராக் ரெக்காடு கணினி பதிவிறக்கம் நகல், ம.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. புகார்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

7. நான் கருங்குழி பாட்டை வீதியில் என்ன கடை வைத்துள்ளேன் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் பங்காளியின் அண்ணன் பன்னீர்செல்வம் எந்த தேதியில் என்ன மருத்துவமனையில் என்ன சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் உள்ளது, வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். 1ம் எதிரி பன்னீர்செல்வத்தின் மருமகள் என்றாலும், 2ம் எதிரி 1ம் எதிரியின் தாயார் என்றாலும்

சரிதான். மற்ற எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 30.08.2025 ம் தேதி சனிக்கிழமை.

8. சனிக்கிழமையில் திருக்கழுக்குன்றத்தில் சந்தை நடக்கும் என்றால் எனக்கு தெரியாது. 3 முதல் 7 எதிரிகள் கருவாடு வியாபாரம் செய்பவர்கள் என்றால் சரிதான். என் வீடும் என் அண்ணன் வீடும் அடுத்தடுத்த தெரு என்றால் இல்லை, என் கடைக்கு எதிர் வீடு என் அண்ணன் வீடு. என் கடைக்கு நேர் எதிர் வீட்டின் பக்கத்து வீடு என் அண்ணன் வீடு. நான் என்னுடைய தொலைப்பேசி மூலம் 100 க்கு போன் செய்தேன் என்பதை காட்ட ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தேவையென்றால் தாக்கல் செய்கிறேன். எதிரிகளுடன் வந்த இரண்டு வழக்கறிஞர்களின் பெயர் என்ன என்றால் அவர்களின் பெயர் தெரியாது, அடையாளம் தான் தெரியும். நான் 30.08.2025 ம் தேதி கொடுத்த புகாரை போலிசார் எளிதில் வாங்கவில்லை, இரவு 11.00 மணிக்கு தான் வாங்கினார்கள், நாங்கள் சண்டை போட்ட பிறகு தான் வாங்கினார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**